**அம்பன்கங்ககோரளை பிரதேச சபை - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அம்பன்கங்ககோரளை பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அம்பன்கங்க கோரளை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**
**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை - | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்குரிய ரூபா 53,436 ஆன செலுத்த வேண்டிய செலவினம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (ஆ) | மீளாய்வாண்டில் செய்திப் பத்திரிகை கொள்வனவிற்காக செலவிடப்பட்ட ரூபா 138,690 ஆன மீண்டும் செலவினம் நூலக புத்தகக கணக்கிலும் மூலதன ஈடுபாட்டிற்கு வருமான பங்களிப்பு கணக்கில் மூலதனச் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டு இருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | ரூபா 18,000 கூட்டுத்தொகையான கேள்வி வைப்பினை மீளச் செலுத்தும் போது மூலதன செலவினக் கணக்காக கருதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | சரியாக இனங் கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (ஈ) | முன்னைய ஆண்டிற்காக மீளாய்வாண்டில் கிடைத்திருந்த ரூபா 59,000 ஆன முத்திரை கட்டண வருமானம் மீளாய்வாண்டின் வருமானமாக கருதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | வருமானம் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும்- |
| (உ) | அப்பல்லாவெள மதகு வீதி அபிவிருத்திக்கான செயற்திட்டதிற்குரிய வீதி | - மேற்படி - | கணக்குகள் சரியாக |

| | | |
|---|---|---|
| அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து ரூபா 100,000 தொகை ஒன்று பெற வேண்டியதாக இருந்த போதும் பிழையாக ரூபா 962,500 பெற வேண்டியதாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. அத்தோடு நிறுத்தி வைத்தலாக ரூபா 62,500 செலுத்த வேண்டி இருந்த போதும் ரூபா 962,500 செலுத்த வேண்டும் என தவறாக காண்பிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக கடன்பட்டோர் ரூபா 862,500 ஆலும் கடன் கொடுத்தோர் ரூபா 900,000 ஆளும் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தன. | | தயாரிக்கப்பட வேண்டும் - |
| (ஊ) முன்னைய ஆண்டுக்காக செலுத்த வேண்டிய கணக்காய்வு கட்டணம் ரூபா 164,400 ஆக இருந்த போதும் நிதிக்கூற்றுகளில் அதை 100,000 என 64,400 குறைத்து காண்பிக்கப்பட்டு இருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

**1.6.2. கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்தம் ரூபா 3,874,505 ஆன 04 சொத்து விடயங்கள் மற்றும் ரூபா 486,708 ஆன 13 பொறுப்பு விடயங்கள் நிலையான சொத்துக்கள் பதிவேடு, மற்றும் பொறுப்புகளுக்கான கோவைகள் மற்றும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாமையால் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | தகவல்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | ஒவ்வொரு தலைப்பையும் உறுதிப்படுத்துவதற்காக ஆவணங்கள், கோவைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 15(3) (இ) பிரிவு | மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த செயலாற்றல் அறிக்கையில் | செயலாற்றல் அறிக்கையில் குறித்த | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பிரதேச சபை நிறைவேற்றியிருந்த நோக்கங்கள் எதிர்கால எதிர்பார்ப்புகள் பிரதான செயலாற்றல் குறிகாட்டிகள் மற்றும் நிதிப் பயன்பாடு தொடர்பாக தகவல்கள் உள்ளடக்கப்பட்டு இருக்கவில்லை. | விடயங்களை உள்ளடக்கி சமர்ப்பிப்பதாக | |
| (ஆ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம் | | | |
| (i) | 152(1) ஆம் பிரிவு | சபை பிரதேசத்தில் நிறுவப்பட்டிருந்த 2 தொலைபேசி கோபுரங்களில் இருந்து ரூபா 12,000 ஆன வரி வருமானம் ஒன்று அறவிடப்பட்டு இருக்கவில்லை | நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | - மேற்படி - |
| (i) | 150(1) ஆம் பிரிவு | வியாபார அனுமதி பத்திர கணிப்பீடு ஒன்றில் இனங் காணப்படாத 60 வியாபாரங்களில் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 56,000 ஆன தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | பணம் செலுத்தாத வியாபாரங்கள் நிறுத்தி வைத்து இருப்பதாகவும் பிரதேசத்தின் கிராம சேவை உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தி கடிதங்கள் சமர்ப்பித்துள்ளதாக | விடயத்துக்கு பொறுப்பான வெளிக்கள உத்தியோகத்தர்களால் கணிப்பீடு ஒன்றை மேற்கொண்டு அவ்வறிக்கை மூலம் வியாபாரங்கள் நடாத்தப்படவில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 218 | 2017 திசெம்பர் 31 பின்னர் காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக கணிப்பீடு ஒன்னும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக கணிப்பீடு ஒன்றை மேற்கொள்ளப்பட்டு வருவதாக | விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஈ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க சுற்றறிக்கை | சபைக்கு சொந்தமான ஓட்டத்தில் காணப்படுகின்ற 08 வாகனங்களில் எரிபொருள் எரிவு பரீட்சிக்கப்படவில்லை | எதிர்காலத்தில் குறிப்பிட்ட காலத்தில் எரிபொருள் எரிவு பரீட்சிக்கப்படும் | சுற்றறிக்கையின் அறிவுறுத்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 150,398 ஆக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 1,932,057 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 147,500 | 7,914 | 7,139 | 8,706 | 122,500 | 96,901 | 94,493 | 7,932 |
| (ii) | வாடகை | 357,400 | 245,320 | 255,529 | 29,935 | 349,900 | 229,749 | 207,090 | 40,144 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 245,100 | 293,900 | 293,900 | - | 275,000 | 324,550 | 324,550 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 1,400,000 | 1,626,705 | 1,502,976 | 808,683 | 1,400,000 | 1,517,517 | 1,441,650 | 684,954 |
| | | 2,150,000 | 2,173,839 | 2,059,544 | 847,324 | 2,147,400 | 2,168,717 | 2,067,783 | 733,030 |

### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நீர் பாவனையாளர்களின் தகவல்கள் மற்றும் நீர் கட்டணங்கள் தொடர்பாக தகவல்கள் முறைமையொன்று பேணிச் செல்ல முடியாததால் நிலுவை நீர் கட்டண அறவீடு செயற்பாடு மிகவும் மந்த நிலையில் இருப்பதன் காரணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 8 நீர் முன்மொழிவு முறைகளுக்குரிய ரூபா 808,183 ஆன நிலுவை ஒன்று அறவிடப்பட்டிருக்க வில்லை | தகவல்களை கணினி மயப்படுத்தி நிலுவை கட்டணங்களை அறவிடுவவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | நிலுவை வருமானத்தை அறவிட வேண்டும். |
| (ஆ) | 07 நீர் முன்மொழிவுகளில் நீரிணைப்பு துண்டிக்கப்பட்ட 34 பாவனையாளர்களிடமிருந்து ரூபா 71,665 ஆன நிலுவை ஒன்று அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை நீர் கட்டணங்கள் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை நீர் கட்டணங்களை அறவிடப்பட வேண்டும் |
| (இ) | மாகாண பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய உத்தியோகத்தர்களிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 195,248 ஆன நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 676,400 ஆன முத்திரைக் கட்டணங்கள் பெற வேண்டியிருந்தன. | மேலும் அறவிடப்பட வேண்டிய தொகையைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | பெற வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் பெற வேண்டிய 04 கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 20,658,385 ஆக இருந்தது. | பெற வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக | பெற வேண்டிய தொகை அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய 02 கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 20,116,548 ஆக இருந்தது. | செலுத்த வேண்டிய தொகையை கொடுப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதாக | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) கடந்த 04 ஆண்டுகளுக்குள் 130 கட்டிட அபிவிருத்தி அனுமதி பத்திரங்கள் கிடைத்திருந்ததுடன் அதில் 56 விண்ணப்பங்களுக்காக கட்டிட அபிவிருத்தி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. அதில் 53 விண்ணப்பங்களுக்காக அபிவிருத்தி அனுமதிபத்திரங் களுக்காக இணக்கச் சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கவில்லை | வேறு நிறுவனம் ஒன்றிடமிருந்து பெற்றுக் கொள்ள பரிந்துரையை அடிப்படையில் இணக்கச் சான்றிதழ் வழங்குதல் வழங்கிக் கொண்டிருப்பதால் காலதாமதம் ஏற்படுவதாக | இணக்கச் சான்றிதழ் வழங்கப்பட வேண்டும் |
| (ஆ) முறையான அங்கீகாரம் ஒன்று இல்லாமலும் உடன்படிக்கை செய்யாமலும் முறையற்ற வகையில் ரூபா 2,000 ஆன மாதாந்த வாடகையை நிர்ணயித்து சபைக்கு சொந்தமான பழைய நூலகத்தின் அறையை ரத்தொட்ட பல்நோக்கு கூட்டுறவுச் சங்கத்துக்கு 2021 பெப்ரவரி 10 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்த போதும் அத் திகதியில் இருந்து மீளாய்வாண்டின் இறுதிவரை ரூபா 46,000 அறவிடப்பட்டிருக்கவில்லை | மேலும் அறவிடப்பட வேண்டியதை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | முறையாக உடன்படிக்கை செய்து குத்தகை கையளித்து கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும் |

### 3.3 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாட்டிலான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபைக்குரிய ரூபா 10,799,319 ஆன வாகனங்கள் இயந்திர உபகரணங்கள் மற்றும் 07 உபகரணங்கள் 02 ஆண்டுகள் முதல் 17 இற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் விளைவற்றுக் காணப்பட்டன. | ஒவ்வொரு சொத்துக்கள் தொடர்பாகவும் பொருத்தமான நடவடிக்கை எடுப்பதாக | திருத்தம் செய்து பயன்பாட்டுக்கு எடுப்பதற்கும் கைதவிர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான 52,250 ஆன 15 காணிகள் மற்றும் பெறுமதி இனங்காணப்படாத 38 காணிகளின் உரித்து கையேற்கப்பட்டு இருக்கவில்லை | கையேற்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | காணிகளின் உரித்தினை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2018 ஜூலை 28 ஆந் திகதி மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சிடமிருந்து கிடைத்திருந்த ரூபா 1,319,050 பெறுமதியான மகேந்திரா கெப் வண்டியின் உரித்து கையேற்கப்பட்டிருக்க வில்லை | - மேற்படி - | உரித்தினை கையேற்க வேண்டும் |

**3.5 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணியுடன் ஒப்பிடும் போது 08 பதவிகளில் 12 வெற்றிடங்களும் ஒரு பதவியில் மிகையொன்றும் காணப்பட்டன. | நிறுவன மயப்படுத்தப்பட்ட பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு அனைத்தும் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளதாக | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினை பேணிச் செல்லல் வேண்டும். |

:

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**
**பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 05 வருமான விடயங்களுக்குரிய ரூபா 2,016,000 ஆன மதிப்பிடப்பட்ட வருமானம் எதுவும் அறவிடப்பட்டிருக்கவில்லை. 12 வருமான விடயங்களில் மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளவாறான வருமானத்திற்கு இடையே 24 சதவீதம் முதல் 150 சதவீதம் வரையன வீச்சில் விலகல் காணப்பட்டதுடன் 07 செலவின விடயங்களில் தேறிய நிதிஏற்பாடு மற்றும் உள்ளவாறான செலவினங்களுக்கு இடையே 70 சதவீதம் முதல் 97 வரையான விலகல்கள் காணப்பட்டன. | இது தொடர்பில் எதிர் வரும் நடவடிக்கை எடுப்பதாக | தேவைப்பாட்டினை கருத்திற் கொண்டும் பாதீடு தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும். |